# e - thaksalawa (கல்விக்கூடம்)

## க.பொ.த சா/தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்

**History – I,II**

**வரலாறு -I,II**

**புள்ளித்திட்டம்**

கல்விக்கூடம்

The National e-learning Portal for The General Education



## பகுதி - I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 1 | 11. | 1 | 21. | 1 | 31. | 2 |
| 2. | 3 | 12. | 4 | 22. | 1 | 32. | 1 |
| 3. | 4 | 13. | 4 | 23. | 4 | 33. | 2 |
| 4. | 2 | 14. | 2 | 24. | 2 | 34. | 3 |
| 5. | 3 | 15. | 3 | 25. | 1 | 35. | 4 |
| 6. | 4 | 16. | 4 | 26. | 2 | 36. | 1 |
| 7. | 1 | 17. | 1 | 27. | 1 | 37. | 2 |
| 8. | 2 | 18. | 2 | 28. | 4 | 38. | 3 |
| 9. | 3 | 19. | 2 | 29. | 3 | 39. | 1 |
| 10. | 4 | 20. | 3 | 30. | 1 | 40. | 3 |

## வினாப்பத்திரம் II

### பகுதி I

1. அ) (i) இலங்கைப்படம்
(ii) உலகப்படம்

ஆ) (i)

A - கீர்த்தி ஶ்ரீ மேக வண்ண மன்னன்.
B - ஜயவீரபண்டார
C - பர்த்த லோமியோ டயஸ்
D - பிராங்லின் ரூஸ் வெல்ட்

(ii) 1. கஹவனு
2. தங்கம்
3. பொரளாதார முறைமை / தொழில்நுட்ப அறிவு.
4. நாணய விஞ்ஞானம்

1. அப்சரெஸ்களின் உருவம் / சிகிரியா ஓவியம்.
2. முதலாம் காசியப்பன்.
3. சிகிரியா குன்று
4. மின்னல், முகில்

2. (i) **A -** நகரகுத்திக
B - பதகு
C - சேனாதிபதி

(ii) **A -** புத்தாஸ
B - 5ஆம் மகிந்தன்
C- நான்காம் காசியப்பன்
D– முதலாம் உபதிஸ்ஸ

(iii) ***தலைமைத்துவம்***

- கிராமங்களை கமிக அல்லது கிராமிக என்ற பெயரால் குறிப்பிடப்படும் கிராமத்தலைவர்கள் நிர்வகித்தனர்.
- கிருகபதியிலிருந்து கமிக தெரிவு செய்யப்பட்டனர்.
- கிராமத்தில் வாழ்ந்த செல்வமும், பலமும் படைத்த ஒருவர் கமிகவாகத் தெரிவு செய்யப்பட்டார்.
- கிராம பொது நிகழ்வுகளுக்குத் தலைமை தாங்குதல். உதாரணம் திருமணம்
- குளங்களை நிர்வகித்தல்.
- நீர் விநியோகம்
  **பணிகள்**
- வரி வசூலித்தல்
- கிராமத்தவர்களிடையே ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்தல்.
- கிராமங்களிடையே இணக்கப்பாட்டையும் நட்புறவையும் ஏற்படுத்துதல்.
- பண்டப்பரிமாற்றங்கள்
- பிக்குகளுக்குக் குகைகளைத் தானம் செய்தல்.

(iv)

- பிரஜைகளிடையே ஆன்மீக வளர்ச்சியை ஏற்படுத்தல்
  உதாரணம் :-
  விகாரைகளை அமைத்தல்
  வலகம்பா – அபயகிரி
- மக்களின் சுகாதார வைத்திய வசதிகளை மேம்படுத்தல்.
  புத்ததாச, நான்காம் காசியப்பன், ஐந்தாம் மகிந்தன், துட்டகைமுனு, பண்டுகாபய மன்னன் போன்றவர்களின் பணிகள்.
- இயற்கைச் சூழலைப் பாதுகாத்தல் நிசங்க மல்லன், 3 ஆம் உதயன் 5ஆம் காசியப்பன் போன்றவர்களின் கல்வெட்டுக்கள். நாட்டில் சமாதானத்தையும் பாதுகாப்பையும் ஏற்படுத்தல்.
- எதிரிகள் நாட்டை ஆக்கிரமிக்கும் போது அவர்களிடமிருந்து நாட்டு மக்களைப் பாதுகாத்தல்.
  உதாரணம் :- 2ம் பராக்கிரமபாகு மன்னனின் நடவடிக்கைகள்.
  சந்திரபாணு, கலிங்க மாகனைத் தோற்கடித்தல்.
  1ஆம் விஜயபாகு மன்னன் நாட்டிலிருந்து சோழர்களை விரட்டுதல்.
- நாட்டில் பொருளாதார விருத்தியை ஏற்படுத்தல்.
- குளங்களை அமைத்தல், கால்வாய்களை அமைத்து நீர்ப்பாசன நடவடிக்கைகளை விஸ்தரித்தல்.
  விவசாயத்திற்கு தேவையான நீரை வழங்குதல்.
  உதாரணம் :- வசபன், மகாசேனன், தாதுசேன மன்னர்களுடைய நீர்பாசன நடவடிக்கைகள்.

3. (i) **A -** கலாதித்த
B -பல்லவங்க

C-கிம்ஹதித்த

(ii) **A -** ஆலாகானப்பிரிவேனா அகழ்வு
B - ஜேத்தவனராமய அகழ்வு
C- அபயகிரி அகழ்வு
D – உடரஞ்சாமடம

(iii) வனைதல் சில்லு என்னும் எளிய உபகரணம் பயன்படுத்தப்பட்டது.

- மட்பாண்டத்திற்கான களிமண்ணைத் தெரிவு செய்தல்.
- அதனைப்பதனிடல்
- சுடுவதற்கான சூளையை அமைத்தல்.
- முன் வரலாற்றுக் காலத்திற்குரிய ஒரு மட்பாண்டம் வெளியே செந்நிறமாகவும் உட்பகுதி கறுப்பு நிறமாகவும் தயாரிக்கப்பட்டிருந்தது.
- கருஞ்சிவப்பு மட்பாண்டம் எனப்பட்டது.
- உடரஞ்சா மடம வீட்டில் கண்டெடுக்கப்பட்ட நிறம் தீட்டப்பட்ட மட்பாண்டம்.
- அதில் வெள்ளை நிறப்பின்னணியில் செந்நிறக் கோடுகள் வரையப்பட்டிருந்தன.
- இதற்கு செந்நிறக் கற்களே பயன்படுத்தப்பட்டது.

(iv) சந்தைக்கு வரும் வண்டிகளிலிருந்து அல்லாது சந்தையைக் கடந்து செல்லும் வண்டிகளிலிருந்து வரி வசூலிக்கக் கூடாது.

- சூரிய ஒளியிலிருந்து பாதுகாக்கப்பட்ட மண்டபம் ஒன்றின் கீழ் மட்டுமே வெற்றிலை வியாபாரம் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- வெற்றிலை, பாக்கு அதற்கு என ஒதுக்கப்பட்ட இடத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும்
- காய்ந்து போன வெற்றிலை மக்களுக்கு விற்கக்கூடாது.
- போயா தினங்களில் வர்த்தகம் செய்யக்கூடாது. போயாதினங்களில் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் தண்டப்பணமாக எண்ணெய் வரி மகியங்கணை விகாரைக்கு வழங்க வேண்டும்.
- அதிகாரிகளிடம் காண்பிக்காது வர்த்தக நிலையங்களில் பொருட்கள் விற்போரிடமிருந்து இரு மடங்கு வரி அறவிடுதல் வேண்டும்.
- அரச அதிகாரிகளால் அளவு குறிக்கப்படாத தராசுகள் கொண்டு வியாபாரம் செய்தல் ஆகாது.

4. (i) **A -** அநுராதபுரம்
B –மகாகம
C–பண்டுவஸ் நுவர / பராக்கிரம புர

(ii) **A -** பரண் வம்சம்
B –சந்திரபானு
C–எகிப்து
D–சரசோதி மாலை

(iii)**A -** அரசியல் பாணி

- சந்திரபானு என்னும் தென்கிழக்காசியப் பிரதேசத்திலிருந்து வந்த ஆக்கிரமிப்பாளனை முறியடித்தான். (கி.பி 1247)
- 40 வருடங்களாக இராசரட்டைப் பிரதேசத்தை ஆட்சி செய்து வந்த கலிங்கமாகனைப் படுதோல்வியடையச் செய்தான்.
- கி.பி. 1261 இல் மீண்டும் தாக்குதல் மேற்கொண்ட சந்திரபானுவின் படைகளைத் தோற்கடித்ததுடன் சந்திரபானுவும் கொலை செய்யப்பட்டான்.

**இலக்கியப் பணி**

- சிந்த கல்வியறிவுடையவன்.
- பண்டிதன்
- கலிகால சாகித்ய சர்வக்ஞ பண்டிதன் என்ற பட்டப்பெயரைக் கொண்டிருந்தான்.
- கவிசிலுமின என்னும் காவிய நூலை எழுதினான்.
- தம்பதெனிய கதிகாவத எழுதுவிக்கப்பட்டது.
- பௌத்த சமய நூல்களை எழுதுவதற்கு ஆதரவு வழங்கினான்.
- அரசனே நூல்களை எழுதி இலக்கிய வளர்ச்சிக்கு ஆதரவு வழங்கினான்.

(iv) *மழைவீழ்ச்சியை அடிப்படையாகக் கொண்ட பயிர்ச்செய்கை.*

- குளநீர்ப்பாசன முறை மாற்றமடைந்தது. ஈரவலயம் என்ற காரணத்தினால் குளங்கள் அமைக்கப்பட வேண்டிய தேவை ஏற்படவில்லை.
- நெல் பிரதான பயிர்.
- நீர்பற்றாக்குறையான பகுதிகளில் சேனைப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டது.
- வர்த்தகப் பொருளாதாரம் வளர்ச்சியடைந்தது.
- உணவிற்காக பயிரிடப்பட்ட பயிர்களின் மேலதிக விளைச்சல் விற்பனை செய்யப்பட்டது.
- ஈரவலயக் காடுகளில் இயற்கையாக வளர்ந்த கறுவா முக்கிய வர்த்தகப்பயிர்.
- பாக்கு, மிளகு, ஏலம், சாதிக்காய் முதலிய பயிர்களின் மேலதிக விளைச்சல் ஏற்றுமதி செய்யப்பட்டது.
- முத்து, மாணிக்கம், யானை, யானைத்தந்தம் முதலிய வர்த்தகப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.
- இந்தியா, அரேபியா, சீனா, பாரசீகம், எகிப்து முதலிய நாடுகளுடன் இலங்கை வர்த்தகத் தொடர்புகளை வைத்திருந்தது.
- வெளிநாட்டு வர்த்தகம் அரசனின் தனி அதிகாரத்தின் கீழ்க் காணப்பட்டது.
- சீனாவிலிருந்து இலங்கைக்கு பீங்கான் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.
- இபின் பதூதா என்னும் அரேபிய தேசசஞ்சாரி இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் வளர்ச்சியடைந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

5. (i) 1. தந்துரே
2. பலன
3. ரந்தெனிவெல
4. கன்னொருவ

(ii) முக்கிய தலைவர்கள் தொடர்பான வழக்குகள்.

- கிளர்ச்சிக் காரர்கள் தொடர்பான வழக்குகள்.
- சூழ்ச்சி தொடர்பான வழக்குகள்.
- இராசத்துரோகத்துடன் தொடர்புபட்ட வழக்குகள்.
- விகாரைகள், பிக்குகள் தொடர்பான வழக்குகள்.

(iii) 1. ஒல்லாந்தரின் உதவியுடன் போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து வெளியேற்றுதல்.
2. போர்த்துக்கேயரின் கீழிருந்த பிரதேசங்களைக் கண்டி இராச்சியத்துடன் இணைத்து சுதந்திர இலங்கையை உருவாக்குதல்.
இதில் போர்த்துக்கேயரை இலங்கையில் இருந்து வெளியேற்ற முடிந்தது.

- இரண்டாவது நோக்கத்தினை அடைய முடியவில்லை.
- அரசன் ஒல்லாந்தரைத்தாக்கி அவர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய பிரதேசங்களைக் குறைத்தான்.
- இதனால் போர்த்துக்கேயரிடமிருந்த நிலப்பகுதியை விடக்குறைந்த நிலப்பகுதியே 1658 ஆம் ஆண்டளவில் ஒல்லாந்தருக்குக் கிடைத்தது.

(iv) 1. விவசாயம்
2. கைத்தொழில்
3. வர்த்தகம்

**விவசாயம்**

- நுகர்வை அடிப்படையாகக் கொண்டிருந்தது.
- சுயதேவைப் பொருளாதாரம்.
- மலைப்பாங்கான பிரதேசம் இதனால் நெற்செய்கைப் பிரதேசம் வரையறுக்கப்பட்டிருந்தது.
- மலைப்பிரதேசங்களின் பள்ளத்தாக்குகளில் படிமுறையிலும் சம நிலங்களில் வயல் வெளிகளிலும் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. அத்தம் முறை பயன்படுத்தப்பட்டது.
- அதிகளவான நிலம் சேனைப்பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டது.
- குரக்கன்,சோளம், தினை, சாமை போன்ற தானிய வகைகள் கிழங்கு வகைகள் பயிரிடப்பட்டன.
- வீட்டுத்தோட்டங்களில் பலாக்காய்,ஈரப்பலாக்காய், மிளகு, சாதிக்காய், கராம்பு, பாக்கு, மரக்கறி பழவகை என்பன செய்கை பண்ணப்பட்டன. விவசாயத்திற்காகவும் பால் தேவைக்காகவும் விலங்குகள் வளர்க்கப்பட்டன.

**கைத்தொழில்**

- இரும்பு உலோகம், மரம், அரசுக்கு பன்புல் கைத்தொழில்கள் முன்னேற்றமடைந்திருந்தன.
- வனைதல், விவசாய உபகரணங்கள் செய்தல், கைத்தொழில், ஆபரணக் கைத்தொழில், பித்தளைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன.
- பாரம்பரிய கலைப்பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன.
- பாய் இழைத்தல் கைத்தொழில் காணப்பட்டது. தந்த கைத்தொழில் வளர்ச்சியடைந்திருந்தது.
- குல அடிப்படையில் கைத்தொழில்கள் காணப்பட்டன.

**வர்த்தகம்**

- வாசனைப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.
- முக்கிய ஏற்றுமதிப் பொருள் கறுவா.
- ஏலம், கராம்பு, சாதிக்காய், பாக்கு, தேன், மெழுகு போன்ற பொருட்களும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

6. (i) **A -** *கோவா*
B – *பாண்டிச்சேரி / காரைக்கால் / சந்திரநாகூர்*
C– *சென்னை / மும்பாய் / கல்கத்தா*

(ii) *1.* அனுபவம் குறைந்தவனாக மன்னன் இருந்தமை.
*2.* நாயக்க வம்ச உறவினர்களின் கருத்துக்களை ஏற்றுச் செயற்பட்டமை.
*3.* கண்டியின் பிரதம பிரதானிகள் இருவருடனும் மன்னன் முரண்பட்டமை.

- மன்னனாக்கிய பிலிமத்தலாவை பிரதானியுடன் மோதலை உருவாக்கியமை.
- பிலிமத்தலாவைக்கு மரண தண்டனை விதித்தமை.
- எகலப்பொல பிரதானியுடன் முரண்பட்டமை.

(iii). கரையோரப் பகுதியிலும் மலைநாட்டு எல்லைகளிலும் காவல் நிலையங்களை வைத்திருக்க வேண்டி இருந்ததுடன் அதற்கான செலவுகளும் அதிகரித்திருந்தது.

- கடவைகளில் மன்னனுக்கு வரி செலுத்த வேண்டியிருந்தது.
- கொழும்புக்கும் திருகோணமலைக்கும் இடையே தொடர்புகளை மேற்கொள்வதற்கு மலையக அரசு ஒன்று இருப்பது பிரித்தானிய நிர்வாகத்திற்கு இடையூறாக இருந்தமை.
- கிளர்ச்சியாளருக்கு மன்னன் ஆதரவு வழங்கியமை.
- பிரித்தானியரை இலங்கையில் இருந்து வெளியேற்ற பிரான்சியரிடம் உதவி கோர முடியும் எனக்கருதியமை.

(iv) A – *1.* கோல்புறூக் சீர்திருத்தம்

2. புதிய வரிக்கொள்கை

1. அரசின் நிலக்கொள்கை

1840 அரசின் தரிசு நிலச்சட்டம்

இதன் படி

30 வருடங்கள் தொடர்ச்சியாக நிலத்தை அனுபவித்தமைக்கான ஏற்றுக் கொள்ளக்கூடிய சான்றுகளைச் சமர்பிக்காத பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்படாத நிலம் அரசுடமையாக்கப்பபட்டமை.

- கிராமசபைகள் செயலிழந்தமை
- கோல்புறூக் சீர்திருத்தத்தினால் கட்டாய அரச சேவை ஒழிக்கப்பட்டது.
- கிராம சபைககளிடமிருநந்த நீதித்துறை அதிகாரமும் இல்லாது போனது.
- புதிய நீதிமன்ற முறை.
- அரசுக்கும் பொது மக்களுக்கும் இடையிலான தொடர்பு அதிகரித்தமை.

2. அரசின் புதிய வரிக்கொள்கை

ஆளுனர் டொரிங்டன்

முத்திரை வரி, வண்டி வரி, படகுவரி, கடை வரி, துப்பாக்கி வரி, ஆள்வரி, நாய் வரி துப்பாக்கி வரி, நாய் வரி, ஆள்வரிக்கு எதிர்ப்பு அதிகரித்தது (விளக்கம்.)

B. ו கொங்காலே கொட பண்டா

வீரபுரன் அப்பு

டிங்கிராஸ்

தீனிஸ்

C. **தோல்வி காரணம்.**

1. முறையாக ஒழுங்குபடுத்தப்படாமை.
2. சாதாரண பொதுமக்கள் இப் போராட்டத்தில் ஈடுபட்டமை

- அவர்களுக்குத் தேவையான பயிற்சி ஆயுதங்கள் அவர்களிடம் இல்லாமை.
- மலையாகப் பிரதேசம் தொடர்பாக ஆங்கிலேயருக்கு இருந்த அறிவு
- ஆங்கிலேயரின் படைபலம், ஆயுதம்
- மலைாட்டின் சில பிரதேசங்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதாக போராட்டம் இருந்ததினால் அடக்க முடிந்தது.
- கொங்காலே கொட பண்டாவ தம்புள்ளை விகாரையில் அரசனாக்கியமை.

D. **போராட்டத்தின் விளைவு**

- ஆளுநர் டொரிங்டன் பிரித்தானியாவிக்கு அனுப்பப்பட்டார்
- கடும் எதிர்பிற்கு உள்ளானவரிகள் நீக்கப்பட்டன. கடைகள் மீதான வரி, நாய் வரி முற்றாக நீக்கப்பட்டது
- பௌத்த சமயம் தொடர்பாக அரசின் செயற்பாடு தொடர்பாக மக்களின் மனக்குறை இனங்காணப்பட்டு சீர்செய்யப்பட்டது.
- 

7. (i) 1. கரைநாட்டு உற்பத்தியாளர் சங்கம்.

2. சிலாபச் சங்கம்

3. யாழ்ப்பாணச் சங்கம்

(ii) வடமாகாணம்

மேல்மாகாணம்

கிழக்கு மாகாணம்

மத்திய மாகாணம்

தென் மாகாணம்.

(iii) . இதுவரை இலங்கை என அழைக்கப்பபட்ட நாடு ஸ்ரீலங்கா என்ன பெயரால் அழைக்கப்படும்.

- பிரித்தானியப் பேரரசுடன் கொண்டிருந்த அரசியல் யாப்பு ரீதியான தொடர்புகளை முடிவுக்குக் கொண்டு வருதல்.
- இலங்கையை ஒன்றுபட்ட குடியரசாக்குதல்.
- மனித உரிமைகளைப்பாதுகாத்தல்.
- பெயரளவு அதிகாரமுள்ள ஜனாதிபதிப்பபதவி அறிமுகப்படுத்தப்பட்டது.
- சட்டசபை தேசசிய அரசுப் பேரவை என அழைக்கப்பட்டது.
- அமைச்சரவையின் தலைவர் பிரதமர்
- நீதிமன்ற தொகுதி ஒன்று உருவாக்கப்பட்டது.

(iv) . உலர் வலயக் காணிகளுக்கு பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு நீர்வசதியை வழங்குதல்.

- மின் உற்பத்தியை அதிகரித்தல்.
- குடியேற்றத்திட்டங்களை உருவாக்குதல் நிலமற்ற விவசாயிகளுக்கு காணிகளைப் பெற்றுப் கொடுத்தல்.
- தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல்.
- வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்தல்.
- நன்னீர் மீன் வளப்பினை விருத்தியடையச் செய்தல்.
- நெல் உற்பத்தியை அதிகரித்தல்.

8. (i) 1. கிறிஸ்டோபர் கொலம்பஸ்
2. அமெரிக்கோ வெஸ்புஷி
3. பெர்டினன்ட் மகலன்
4. கபோடட் சகோதரர்கள்.

(ii) A. சமய சீர்திருத்தங்கள்
B. மொழி / இலக்கியம்
C. சித்திரம்
D. கட்டடக்கலை

(iii) விவசாயத்துறையில் ஏற்பட்ட மாற்றம்.

- நில உடமையாளர்களால் விவசாயிகளின் சிறிய நிலங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு பெரிய பண்ணைகள் உருவாக்கப்பட்டமை.
- இது நில அடைப்பு இயக்கம் அல்லது வேலியடைப்பு இயக்கம் எனப்பட்டது.
- இதனால் விவசாய நிலங்களை இழந்த கிராமிய விவசாயிகள் வேலை தேடி நகரப்பகுகுதிகளை நோக்கிப்புபுலம் பெயர்ந்தமை.

- சிலுவை யுத்தம் முடிவடைந்த பின்னர் நிலமானிய அடிமைகள் பண்ணைகளுக்குச் செல்லாமல் நகரங்களில் குடியமர்ந்தமை.
- இதன் காரணமாக கைத்தொழில் துறைக்குத் தேவையான ஊழியர்களைப் பெற்றுக் கொள்ளமுடிந்தது.

(iv) A. அரசியல்

- பணக்காரவர்க்கம்.
- ஏழைவர்க்கம் உருவாகியது
- உழைப்பு சுரண்டப்பட்டது.
- குறைந்த கூலி
- தொழிலாளர் வாழ்க்கை பாதிப்பு
- முதலாளி, தொழிலாளி என்ற வர்க்க முரண்பாடு தோற்றம் பெற்றது.
- வேலைநிறுத்தங்கள், உரிமைப்போராட்டங்கள் ஆரம்பித்தது.
- பொதுவுடமை வவாதம், தாராண்மை வாதம் ஆகிய அரசியல் கொள்கைகள் தோற்றம் பெற்றது.
- நவ குடியேற்றவாதம் தோற்றம் பெற்றது.

**B. பொருளாதாரம்**

- கைத்தொழில் உற்பத்தி அதிகரித்தது
- தன்னிறைவுப் பொருளாதார முறை வீழ்ச்சியடைந்தது.
- ஏற்றுமதி, இறக்குமதி அடிப்பபடையிலான வர்தகப் பொருளாதாரம் முதன்மை பெற்றது.
- வெளிநாட்டு வர்த்தகம் வளர்ச்சியடைந்தது.
- கூட்டு வர்த்தகக் கம்பனிகள் உருவாக்கப்பட்டது.
- பல் தேசிய கம்பனிகள் வளர்ச்சி அடைந்தன.
- வங்கி, கடன் வழங்கும் முறை ஆரம்பமானது.

**C. சமூகம்**

- நகரங்கள் உருவாகியது. வேலைவாய்ப்பு கிடைத்தது. மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தது.
- சனநெருக்ககடி ஏற்பட்டது.
- அடிப்படை வசதிகள் நகரத்தில் குறைவடைந்தது.
- கிராம மக்கள் நகரம் நோக்கி இடம் பெயர்ந்தனர்.
- சமூக வகுப்பு தோற்றம் பெற்றது.
- பாதுகாப்பற்ற தொழிற்சாலைகளில் பெண்கள், சிறுவர் சேவை செய்தனர்.
- சேரிப்புறம் உருவாகிறது, சூழல் மாசடைதல் சமூக விரோத செயல்கள் அதிகரித்தது.

9. (i) *1.* போர்த்துக்கல்

*2.* ஸ்பானியா/ ஸ்பெயின்

3. ஒல்லாந்து

4. பிரான்ஸ்

5. பிரித்தானியா

(ii) A. *1.* பிரான்சிய அச்சுறுத்தல்.

2. செவ்விந்தியரின் அச்சுறுத்தல்கள்.

B. *1.* பிரித்தானியா ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்.


2. தாய் நாட்டுச் சட்டங்களைப் புதிய குடியேற்றங்களில் செயற்படுத்த வேண்டும்.


(iii) ⸤ மானிய முறை நிலவியமை.

- பிரான்சிய சமூகத்தில் அரச குடும்பம்,குருமார், பிரபுக்கள், சாதாரணமக்கள் என்ற பிரிவு காணப்பட்டது.
- குருமார், பிரபுக்கள் சமூகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தனர்.
- பிரபுக்கள், குருமார் பிரபுக்களிடமிருந்து வரியைப் பெற்றனர்.
- குருமார் செல்வந்தர்
- பிரபுக்களின் கீழ் நிலத்தின் பெரும் பகுதி இருந்தது.
- பிரபுக்கள் எல்லா இடத்திலும் வேட்டையாட உரிமை இருந்தது.
- அரச வரி செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தனர்.
- கல்வியில் பின்தங்கிய பிரபுக்கள் சலுகைகளை அனுபவித்தனர்.
- பிரான்சில் சலுகைகளற்ற விவசாயிகள் துன்பமடைந்தனர்.

(iv) ⸤ ஊழல் நிறைந்த சர்வாதிகார ஆட்சி

- ரஷ்யாவை ஆட்சி செய்த சார்மன்னர்கள் அரச பதவி கடவுள் கொடுத்த வரம். எனக் கருதி செயற்பட்டமை.
- மக்களைக் கொடுமைப்படுத்தி வரி அறவிட்டமை.
- தெய்வீகக் கோட்பாட்டிற்கு அமைய செயற்பட்ட மன்னர்கள் சமயத்தில் அதிக கவனம் செலுத்தினர்.
- மானிய முறையான விவசாயப் பொருளாதாரம்.
- நிலம் பிரபுக்களுக்கு உரியதாக இருந்தது.
- சாதாரண மக்களான விவசாயிகள் நில அடிமைகளாக விவசாயத்ததில் ஈடுபட்டனர்.
- ரஷ்யா – யப்பான் யுத்தம். ரஷ்யா தோல்வி
- முதலாம் உலக யுத்தத்தில் ஈடுபட்டது.
- விவசாயிகள், தொழிலாளர் விருப்பம் இன்றி யுத்தத்தில் அரசு ஈடுபட்டது.


வல்லிபுரம்
யாழ்ப்பாணம்
யான் ஓயா
கலாவாவி
சிலாபம்
மினிப்பே கால்வாய்
கண்டி
கல்ஓயா
தந்துரே
ஸ்ரீ ஜெயவர்த்தன புர
கதிர்காமம்
மகாகம


போர்த்துக்கல்
ரோம்
இஸ்தான்புல்
ஜப்பான்
மும்பை
யாவா
N